# பொள்ளாச்சி நகராட்சி
## 31.01.2018 அன்று நடைபெற்ற நகர மன்ற சாதாரண கூட்ட தீர்மானங்கள்

724 பொள்ளாச்சி நகராட்சியில் குடிநீர் விநியோகத்தில் தலைமை நீரேற்று நிலையம், நீர் உந்து நிலையம், 9 எண்ணம் நீர் உந்து நிலையம், 9 எண்ணம் நீர் தேக்க வளாகங்கள் மற்றும் இயற்கை உயிரி எரிவாயு கலன் வளாகத்தில் காவல் பணிபுரிய தேவையான பணியாளர்கள் தற்சமயம் போதிய அளவில் இல்லாத காரணத்தால், மேற்காண் இடங்களில் காவல் பணிகள் புரிய தேவையான காவலர் பணியாளர்களை அவுட் சோர்சிங் முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி அமர்த்த வேண்டியுள்ளது. மேற்காண் இடங்களில் 12 மணி நேர பணிக்கு ஒருவர் வீதம் 12 இடங்களில் காவல் பணிபுரிய 24 நபர்கள் (காவலாளிகள்) தேவைப்படுகிறார்கள். இவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், கோவை அவர்களின் செயல்முறை ஆணைப்படி (ந.க.எண்.7979/2017/இ3 நாள். 29.07.2017) நிர்ணயம் செய்யப்பபட்ட கூலியுடன் ESI, EFF, Insurance மற்றும் Service Tax யுடன் 23.02.2018 முதல் 22.05.2018 வரையிலான 89 நாட்களுக்கு வழங்க உத்தேசமாக ரூ.10,60,000/– செலவு ஆகும். மேற்காண் இடங்களில் அவுட்சோர்சிங் முறையில் காவலர் பணியாளர்களை அமர்த்தவும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10,60,000 /– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம். 2. மேற்படி பணிக்கு செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

725 பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான காந்தி வாரச்சந்தையில் உள்ள தினசரி காய்கறி வியாபாரச்சந்தையில் உள்ள சில்லரை வியாபார கடைகளுக்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி 21.08.2015, 06.11.2015, 19.07.2016, 29.07.2016, 18.08.2016, 03.11.2016, 10.11.2016, 25.01.2017, 09.02.2017, 22.02.2017, 08.03.2017, 23.03.2017, 09.05.2017, 26.05.2017, 07.06.2017, 16.06.2017, 29.06.2017, 07.07.2017, 14.07.2017, 21.07.2017, 28.07.2017, 04.08.2017, 11.08.2017, 22.08.2017, 29.08.2017, 12.09.2017, 12.10.2017, 02.11.2017, 16.11.2017, 01.12.2017, 14.12.2017 மற்றும் 09.01.2018 தேதிகளில் கேட்கப்பட்டதில் சில்லரை வியாபார கடை எண்.84க்கு ஒப்பந்தப்புள்ளி கேள்விகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்டுகிறது.

| வ. எண் | இனம் | பெயர் | உயர்ந்தபட்ச ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கேள்வி |
|---|---|---|---|
| 1 | சில்லரை வியாபார கடை எண்.84 | திருமதி.டி.சுசிலா,<br>2/267 எம்.ஜி.ஆர்.நகர்<br>புளியம்பட்டி,<br>பொள்ளாச்சி– 642002<br>செல். 72990 88990 | ரூ.5555/– மாதம் 1க்கு |

**அலுவலகக்குறிப்பு**

கடந்த 32 முறை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஏலம் /ஒப்பந்தப்புள்ளி இதை விட கூடுதலாக கோர யாரும் முன் வரவில்லை, நகராட்சி நிதி நிலையை கருத்திட் கொண்டு கேட்கப்பட்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி கேள்வியை மன்றம் ஏற்கலாம்.

(3328/2015/இ6)

726 பொள்ளாச்சி நகராட்சிக்காக பாலக்காடு பிரதான சாலையில் புதிய அலுவலகம் கட்டப்பட்டுள்ளது. வளாகத்தின் தரைத்தளத்தில் சிறிய கூட்ட அரங்கு அறை மற்றும் இரண்டாம் தளத்தின் நகர்மன்ற கூட்ட அறை ஆகியவை அமைந்துள்ளன. தரைதளத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறிய கூட்ட அரங்கு அறையில் கூட்ட அரங்கு நடப்பதற்கு ஏதுவாக “ப” வடிவில் டேபிள்கள் மற்றும், அமர இருக்கைகள் அமைக்கவும் மற்றும் தருவிக்க வேண்டியுள்ளது. மேலும் இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள நகர்மன்ற கூட்ட அரங்கில், நகர்மன்ற கூட்டம் நடத்துவதற்கு ஏதுவாக, நீள் வட்ட வடிவிலான டேபிள் அமைக்கவும் வேண்டியுள்ளது. எனவே, மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ரூ.22.30இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.மேற்காணும் பணிக்குரிய மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

727 கோவை–திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை NH 83 (old NH 209) பொள்ளாச்சி நகராட்சி எல்லைப்பகுதிக்குள் செல்வதில், காந்தி சிலை எதிரில் State Bank அருகிலிருந்து வடக்காக குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் சுமார் 300 மீட்டர் நீளத்திற்கு பகிர்மான குழாய்கள் அமைத்திடவும், இதற்கான மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

728 நகராட்சியின் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய பகிர்மான மற்றும் பம்பிங் குழாய்கள் அரசு நெடுஞ்சாலைகளில் பதிக்கப்பட்டுள்ளது. இக்குழாய்களில் நீர் கசிவு ஏற்படும் போது நெடுஞ்சாலைகளில் மண் அகழ்வு செய்து, கசிவினை சீர் செய்ய வேண்டியுள்ளது. இதனால் நெடுஞ்சாலைதுறைக்கு பழுதடைவதை சீர் செய்ய நெடுஞ்சாலை துறைக்கு சாலை சீரமைப்பு கட்டணம் செலுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்பகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

729 பொள்ளாச்சி நகராட்சிக்காக பாலக்காடு ரோடு பிரதான சாலையில் நான்கு தளங்கள் கொண்ட கட்டிடமாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது. வளாகத்தின் கீழ்த்தளத்தில் உதவி திட்ட அலுவலர் அறை, வரிவசூல் மையம் அறை, ஆதார் அறை, அரசு இ– சேவை அறை மற்றும் பிறப்பு இறப்பு சான்றிதழ் அறை ஆகியவை அமைந்துள்ளன. இவ்வறைகளில் பணிபுரிய அலுவலர்களுக்கு தேவையான டேபிள்கள் கோப்புகளை பாதுகாப்பாக கையாள பாதுகாப்பு அறைகள் (wooden Racks) ஆகியவை அமைக்க வேண்டியுள்ளது. மேலும் வரிவசூல் மையத்தில் வசூல் செய்ய தேவையான counterகள் அமைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ரூ.15.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்குரிய மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

730 பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் பிரிவில் அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையம், மார்க்கெட் ரோடு, நீர் உந்து நிலையம், உயர் மட்ட நீர் தேக்க தொட்டிகள் மற்றும் தரை மட்ட நீர் தேக்க தொட்டிகளில் சேகரம் செய்யப்படும் குடிநீரில் கிரிமி நாசினியாக திரவ குளோரின் வாயு ஹைபோ குளோரின் திரவம் மற்றும் பிளிச்சிங் பவுடர் பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேற்காண் குளோரின் பொருட்களை ஒரு வருடத்திற்கு உபயோகப்படுத்த தேவையான அளவிற்கு வாங்க உத்தேசமாக ரூ.9.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

731 பொள்ளாச்சி நகருக்கு குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக நீர் தேக்க தொட்டிகளுக்கு மார்க்கெட் ரோடு நீர் உந்து நிலையத்தில் நீரேற்றம் செய்ய இரு 100 எச்.பி மின் மோட்டார் பம்புகள் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. 01.01.2018 அன்று இரவு unit 2 மின் மோட்டார் பம்பு இயங்கி கொண்டிருக்கும் போது ஏற்பட்ட மின் அழுத்த வேறுபாடு காரணமாக இதன் காயில் மற்றும் மெயின் சுவிட்டு (250 A MCCB) பழுதடைந்துள்ளது. மேலும், பம்பின் சாப்ட், Impller, Pushes ஆகிய Rotating Elements அதிக தேய்மானம் அமைந்துள்ளது. குடிநீர் விநியோக பணிகள் தடைபடாமல் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், இப்பழுதுகளை சரி செய்யவும், இதற்காகும் உத்தேச செலவினம்

ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

732 பொள்ளாச்சி நகருக்கு குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக உயர் மட்ட நீர் தேக்க தொட்டிகளுக்கு மார்க்கெட் ரோடு நீர் உந்து நிலையத்தில் நீரேற்றம் செய்ய 167 எச்.பி. மின் மோட்டார் பம்புகள் இரண்டு அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. 04.01.2018 அன்று இரவு unit 2 மின் மோட்டார் பம்பு இயங்கி கொண்டிருக்கும் போது ஏற்பட்ட மின் அழுத்த வேறுபாடு காரணமாக இதன் காயில் மற்றும் மெயின் சுவிட்சு (400 A MCCB) பழுதடைந்துள்ளது. குடிநீர் விநியோக பணிகள் தடைபடாமல் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இப் பழுது பணிகளை மேற்கொள்ளவும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

733 பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான காம்பாக்டர் லாரி TN41 AM 4893ன் வாகனத்திற்கு 8.25X20 அளவுள்ள புதியதாக 7 டயர்கள் 7 டியூப்புகள் 7 ப்ளாப்புகளை விநியோகம் செய்து பொருத்தி தரும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 12.01.2018 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளையும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் | ஒரு செட்டுக்கான விலை | ஏழு செட்டுக்கான விலை |
|---|---|---|---|
| 1. | M/S. JD &CO பொள்ளாச்சி | ரூ.15200/– | ரூ.106400/– |
| 2. | M/S.SJP WOOD WORKS / TRADERS, POLLACHI | ரூ.14950/– | ரூ.104650/– |

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்காண் பணியை மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.1,10,000/–க்கு அனுமதி கோரி நகர மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.SJP WOOD WORKS / TRADERS, POLLACHI நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

734 நகராட்சிக்கு சொந்தமான TN41 AB 7878 அம்பாசிடர் காரில் பேட்டரி 12v பழுதடைந்துள்ளதை புதுப்பித்தும், எலக்ட்ரிக்கல் ஒயரிங், Head light Suspension மற்றும் End rod களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து வாகனத்தை இயக்க வேண்டியுள்ளது. மேற்காண் பழுதுகளை சரி செய்யவும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.21,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

735 பொள்ளாச்சி நகராட்சிக்காக பாலக்காடு மெயின் சாலையில் புதிய அலுவலகம் நான்கு தளங்களாக கொண்ட கட்டிடமாக கட்டப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. வளாகத்தின் மேற்குப்பகுதி மற்றும் கிழக்குப்பகுதியில் மதில் சுவர் இல்லாததால், அந்நியர்கள் பிரவேசம் செய்ய வாய்ப்புள்ளது. தெற்குப்பகுதியில் ஏற்கனவே உள்ள மதில் சுவற்றில் மராமத்துப்பணி மேற்கொண்டு புதுப்பிக்க வேண்டியுள்ளது. மேலும், தெற்குப்பகுதியில் அமைந்துள்ள பேனல் அறையிலிருந்து வெளிவரும் கேபிள்கள் E.B. அறை வரை பாதுகாப்பாக சென்றடைய மூடுகற்களுடன் கூடிய அகழி (Cable Trench) அமைக்க வேண்டியுள்ளது. எனவே, அந்நியர்கள் பிரவேசத்தை தடுக்கும் பொருட்டும், வளாகத்தினை பாதுகாக்கும் பொருட்டும், மேற்குப் பகுதி மற்றும் கிழக்குப்பகுதியில் மதில் சுவர் அமைக்கவும், தெற்குப்பகுதியில் பழைய மதில் சுவற்றில் மராமத்துப்பணி மேற்கொண்டு

புதுப்பிக்கவும் மற்றும் கேபிள்கள் செல்ல மூடுகற்களுடன் அகழி அமைக்கவும் ரூ.22.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்குரிய மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

736 பொள்ளாச்சி நகராட்சியில் கல்வி நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான ஆர்.கே.நகர்.நகர்மன்ற நடுநிலைப்பள்ளி வளாகத்திலுள்ள கட்டிடங்களில் மராமத்து பணிகள் செய்து புதுப்பித்தல் பணிக்கு ரூ.8.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு 19.01.2018ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | M/S.தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.12% குறைவு |
| 2 | திரு.ஆர்.சுப்பிரமணியம், பொள்ளாச்சி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.68% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.12% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்ற தீர்மான எண்.579 நாள். 31.10.2017ல் ரூ.8.90 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.12% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்.தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண் 6166/2017/இ1**

737 பொள்ளாச்சி நகராட்சியில் பொது நிதியின் கீழ் தெப்பக்குளம் சாலை நகர்மன்ற பள்ளி வளாகத்திலுள்ள கழிப்பிடத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்து கூடுதல் பணிகள் செய்தல் பணிக்கு ரூ.2.70 இலட்சம் மதிப்பீட்டிற்கு 19.01.2018ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | M/S.தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.09% குறைவு |
| 2 | திரு.ஆர்.சுப்பிரமணியம், பொள்ளாச்சி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.58% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.09% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்ற தீர்மான எண்.466 நாள். 18.09.2017ல் ரூ.2.70 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.09% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்.தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண் 4588/2017/இ1**

738 பொள்ளாச்சி நகராட்சியில் குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் வார்டு எண்.4 சொர்ண புஷ்பம் காலனி பூங்கா ஒட்டிய பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணிக்கு ரூ.5.70இலட்சம் மதிப்பீட்டிற்கு 19.01.2018ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | M/S.தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.12% குறைவு |
| 2 | திரு.ஆர்.சுப்பிரமணியம், பொள்ளாச்சி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.47% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.12% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/S.தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்ற தீர்மான எண்.583 நாள். 31.10.2017ல் ரூ.5.70 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.12% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்.தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண் 6164/2017/இ1**

739 பொள்ளாச்சி நகராட்சியில் கல்வி நிதியின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான வடுகபாளையம் நகர்மன்ற நடுநிலைப்பள்ளி கட்டிடங்கள் மற்றும் கழிப்பிடங்களில் மராமத்து பணி மேற்கொண்டு புதுப்பித்தல் பணிக்கு ரூ.3.40 இலட்சம் மதிப்பீட்டிற்கு 19.01.2018ஆம் தேதியில் முதலாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | M/S.தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவு |
| 2 | திரு.ஆர்.சுப்பிரமணியம், பொள்ளாச்சி | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.60% அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்ற தீர்மான எண்.584 நாள். 31.10.2017ல் ரூ.3.40 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.10% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்.தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண் 6165/2017/இ1**

740 பொள்ளாச்சி நகராட்சிக்காக பாலக்காடு பிரதான சாலையில் புதிய அலுவலகம் நான்கு தளங்கள் கொண்டதாக கட்டப்பட்டுள்ளது. இதில் கீழ்த்தளத்தில் கம்பியூட்டர் செயல்பாட்டிற்காக உதவி திட்ட அலுவலகருக்கு தனியாக Aluminum Partition தடுப்புகள் கொண்டு அறை அமைக்க வேண்டியுள்ளது, மற்றும் முதல் தளத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு பிரிவுகளின் தலைமை அலுவலர்கள் அமரும் அறை, இரண்டாம் தளத்தில் அமைந்துள்ள நகர்மன்ற கூட்ட அறை மற்றும் இதர கட்டிடங்களின் அறைகளின் முகப்புகளில் கதவுகள் மற்றும் கழிப்பிடங்களில் கதவுகள் ஆகியவை அமைக்க வேண்டியுள்ளது. மேலும், கட்டிட வளாகத்தின் இரண்டாம் தளத்தின் மேற்கூரையின் திறந்த வெளிப்பகுதிக்கு எவரும் செல்லத்தகாத வகையில் இரும்பு கதவுகள், இரும்பு கிரில்கள் மற்றும் தண்ணீர் தொட்டி மற்றும் முக்கோண வடிவங்களுக்கு செல்ல இரும்பு ஏணிகள் அமைக்க வேண்டியுள்ளது. எனவே, மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ரூ.12.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்குரிய மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

741 பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் வசிக்கும் பொது மக்கள் தங்களது கட்டிடத்திற்கான நகராட்சிக்கு செலுத்த வேண்டிய 2017–18 ஆண்டுக்குரிய சொத்து வரி காலியிட வரி, தொழில் வரி, தண்ணீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களுக்கான நிலுவை மற்றும் நடப்பு தொகைகளை உடனடியாக செலுத்த தெரிவித்து நகர் முழுவதும் ஆட்டோ மூலம் ஒலி பெருக்கி வைத்து அனைத்து நாட்களிலும் விளம்பரம் செய்ய நகர் மன்ற தீர்மானம் எண்.659 நாள். 29.12.2017 அனுமதி பெறப்பட்டதன் அடிப்படையில் அவசர அவசியத்தினை கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | செல்வம் சவுண்ட் அண்ட் லைட் டெக்ரோட்டர்ஸ், | ரூ.2100/– |
| 2. | திரு.எம்.முருகேசன், சவுண்ட் சர்வீஸ் | ரூ.1950/– |
| 3. | எஸ்.ஆர்.கே.ஆடியோஸ் அன் லைட்ஸ் | ரூ.2050/– |

**அலுவலகக்குறிப்பு**

1. அவசர அவசியம் கருதி குறைந்த விலை விகிதமுள்ள விலைப்புள்ளி வழங்கிறய திரு.எம்.முருகேசன், சவுண்ட் சர்வீஸ் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

**ந.க.எண் 142/2013/இ2**

742 நகராட்சி எல்லைக்குட்பட்ட ஊத்துக்காடு ரோடு வெள்ளையம்மாள் லே–அவுட் முகப்பில் சிறுபாலம் மற்றும் அதனை ஒட்டியுள்ள வடிகால் கட்டப்பட்டு பல வருடங்கள் ஆனது. அதிகமான போக்குவரத்து காரணமாக பக்கச்சுவர்கள் உடைந்ததால், மேல் அமைக்கப்பட்ட சிலாப்புகள் உடைந்த நிலையிலுள்ளது. இதனால் பயனிக்கும் பொது மக்கள் மற்றும் வாகன ஒட்டிகள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். மக்கள் நலன் கருதி, பழுதடைந்த சிறுபாலத்தினை அகற்றி விட்டு, புதிதாக சிறுபாலமும் மற்றும் ஒட்டியுள்ள பழுதடைந்த வடிகாலை அகற்றிவிட்டு புதிதாக வடிகாலும் அமைக்க வேண்டியுள்ளது. எனவே, மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ரூ.4.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்குரிய மதிப்பீட்டினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

743 நகராட்சிக்குச் சொந்தமான காந்தி வாரச்சந்தையிலுள்ள மாட்டுச் சந்தை வளாகத்தில் கட்டண கழிப்பிடம் அமைந்துள்ளது. இக்கழிப்பிடம் கட்டப்பட்டு பல வருடங்கள் ஆனதால், பக்கச்சுவர்கள், உட்புற Water closetகள், பழுதடைந்தும் மற்றும் உடைந்த நிலையிலுள்ளது. இதனால் இதனை பயன்படுத்துவோர்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். மேலும் அருகிலுள்ள மாட்டு ஆஸ்பத்திரியும் கட்டப்பட்டு பல வருடங்கள் ஆனதாலும் அதிலும் மராமத்து பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, மேற்காணும் கட்டிடடங்களில் மராமத்துப்பணிகள் மேற்கொண்டு புதுப்பிக்க ரூ.3.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்குரிய மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

744 நகராட்சி எல்லைக்குட்பட்ட பழனியம்மாள் லே அவுட் டவர் லைன் ரோட்டில் வடிகால் அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆனது. இதனால் வடிகால்களின் பக்கச்சுவர்கள் இடிந்த நிலையில் உள்ளதால், வடிகாலிருந்து வெளியேறும் கழிவு நீர் ஆங்காங்கே தேங்கி சுகாதார கேடு விளைவதால், வசிக்கும் பொது மக்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். பொது மக்கள் நலன் கருதி, மேற்காணும் இடத்தில் பழுதடைந்த வடிகாலினை அகற்றிவிட்டு, புதிதாக வடிகால் கட்ட வேண்டியுள்ளது. வடிகால் கட்ட வேண்டியுள்ளது. வடிகால் கட்டுவதற்கு ரூ.3.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்குரிய மதிப்பீட்டினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

745 நகராட்சி எல்லைக்குட்பட்ட உடுமலை சாலையில் உள்ள நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி கட்டிடம் பழுதடைந்துள்ளதால் கோட்டூர் ரோடு பகுதியில் புதியதாக நகராட்சி பெண்கள் மேல் நிலைப்பள்ளி கட்டிடம் கட்டப்பட்டு பள்ளி இயங்கி வருகிறது. நகராட்சி புதிய அலுவலகம் கட்டும் பணி நடைபெற்று வந்ததால் பழைய பெண்கள் மேல் நிலைப்பள்ளியின் ஒரு பகுதியில் தற்காலிகமாக நகராட்சி அலுவலகம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் அதன் ஒரு பகுதியில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் பொருட்டு இரண்டு சக்கர வாகன நிறுத்தம் அமைக்கப்பட்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அரசாணை (நிலை) எண்.372 நாள்.30.11.2017ல் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை பொள்ளாச்சி விரிவாக்கத்திற்காக, பொள்ளாச்சி வட்டம் மற்றும் நகரம் ச எண். 646, 647, 648/ஏ, 802/2, 803/2, 804/2 ஆகிய சாலைகளில் 2–32 ஏக்கர் விஸ்தீரணமுள்ள இடத்தினை வருவாய் நிலையினை 23 (அ) ன் கீழ் நிபந்தனைகளுக்குட்பட்டு நில மாற்றம் செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி நிலம் ஒப்படைப்பு செய்ய அவ் இடத்தில் குத்தகைக்கு விடப்பட்டு செயல்பட்டுவரும், இரண்டு சக்கர வாகன நிறுத்தத்தின் குத்தகை உரிமத்தினை 15.02.2018 முதல் ரத்து செய்தும், குத்தகை இனத்தில் இருந்து நீக்கம் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அரசாணை (நிலை) எண்.372 நாள். 30.11.2017 மன்றத்தின் பார்வை வைக்கப்படுகிறது.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 371/2015/அ6**

746 பொள்ளாச்சி நகராட்சி பாதாள சாக்கடைத்திட்டத்தில் தரமில்லாத பொருட்களை கொண்டு வேலை செய்யப்படுவதால் நிபுணர் குழு அமைத்து பணிகளை கண்காணிக்க கோரி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உட்பட ஐந்து அரசு துறைகள் மற்றும் ஒப்பந்ததாரர் சுபையா கன்ஸ்க்ட்ரக்சன்ஸ், நிறுவனத்திற்கு எதிராகவும் சமூக ஆர்வலர் திரு.ஜெ.கிருஷ்ணகுமார் அவர்கள் சென்னை உயர் நீதி மன்றத்தில் (வழக்கு எண். 15564/2017) வழக்கு தொடந்துள்ளார். மேற்படி வழக்கின் நகராட்சி சார்பாக ஆஜரான அரசு வழக்கறிஞர் திரு.டி.என். ராஜகோபாலன், அவர்கள் வழக்கு கட்டணமாக ரூ.15000/– செலுத்துமாறு கடிதம் சமர்ப்பித்துள்ளார். மேற்படி வழக்கிற்கு வழக்கு கட்டணமாக ரூ.15000/– அரசு வழக்கறிஞர் திரு.டி.என்.ராஜகோபாலன், அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.